பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
06 09 2024 **FRIDAY** 12 40 **PM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. குஜராத் மாநிலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள மழைநீர் சேகரிப்பிற்கான மக்கள் இயக்கத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று காணொலி வாயிலாக தொடங்கி வைக்கிறார்.

2. இந்தியா – ஜப்பான் இடையே டிஜிட்டல் கட்டமைப்பை வலுப்படுத்துவது குறித்து அந்நாட்டு அமைச்சர் தாரோ கோனாவுடன் மத்திய அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

3. அமெரிக்காவின் மூன்று பெரிய தொழில்நிறுவனங்களுடன் தமிழகத்தில் 850 கோடி ரூபாய் முதலீடு செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் முன்னிலையில் சிகாகோவில் கையெழுத்தாகியுள்ளன.

4. யுக்ரைன் போர் நிறுத்தம் தொடர்பான அமைதிப் பேச்சுக்களை முன்நின்று நடத்த இந்தியா, பிரேஸில், சீனா நாடுகள் முன்வர வேண்டும் என்று ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. 20 வயதுக்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் ஜோதி பெர்வால் தங்கம் வென்றுள்ளார்

**>>>><<<<**

மழைநீர் சேகரிப்பிற்கான மக்கள் இயக்கத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று குஜராத் மாநிலம் சூரத்தில் காணொலி வாயிலாக தொடங்கி வைக்கிறார்.

பிரதமரின் நீர்வளத் திட்டத்தின் ஒரு பகுதியாக, குஜராத் மாநிலத்தில் இந்த இயக்கம் செயல்படுத்தப்படவுள்ளது.

இதற்கான மழைநீர் சேகரிப்பு இயக்கத்தில் மக்களை ஒன்றிணைத்து நீர்பாசன மேலாண்மையை வலுப்படுத்துவது மற்றும் நீண்டகால தண்ணீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் நீர்ஆதாரங்களை பாதுகாப்பது உள்ளிட்டவை இந்த இயக்கம் மூலம் செயல்படுத்தப்படும்.

பொதுமக்கள், உள்ளாட்சி அமைப்புகள், தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றை ஒன்றிணைத்து, இந்த இயக்கத்தை குஜராத்தில் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இம்மாநிலத்தில் உள்ள 24 ஆயிரத்து 800க்கும் மேற்பட்ட மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை, பொதுமக்களின் ஒத்துழைப்புடன் மேம்படுத்துவதற்கான முயற்சி எடுக்கப்படும்.

குஜராத்தில் பிரதமர் தொடங்கி வைக்கும், வரலாற்றுச் சிறப்புமிக்க மழைநீர் சேகரிப்பு மக்கள் இயக்கத்தை அனைத்து மாநிலங்களும் பின்பற்றுவதற்கான முயற்சிகள் எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>><<<<

ப்ருனே சிங்கப்பூர் நாடுகளுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி மேற்கொண்ட பயணம், இந்தியாவின் கிழக்கத்திய வெளியுறவுக் கொள்கையில் முக்கியமான தருணம் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், தென்கிழக்கு ஆசிய நாடுகளுடன் தூதரக மற்றும் பொருளாதார உறவுகளை மேம்படுத்துவதற்கான வாய்ப்பாகவும் இந்த பயணம் அமைந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா – ப்ருனே இடையேயான 40ஆண்டுகால தூதரக உறவுக்கு மேலும் வலுசேர்க்கும் வகையில் பிரதமரின் பயணம் அமைந்ததாக குறிப்பிட்ட அவர், முதல்முறையாக இந்தியப் பிரதமர் ப்ருனே சென்றது முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த பத்தாண்டுகளில் இந்தியா மேற்கொண்ட வெளியுறவுக்கொள்கை சீர்திருத்தங்களுக்கு இருநாடுகளின் தலைவர்களும் ஆதரவு அளித்ததையும் அவர் தெரிவித்துள்ளார்.

உலக அரங்கில் வலுவான பொருளாதாரமாக இந்தியா உருவாகி வருகிறது என்றும் திரு. ஜெய்சங்கர் கூறினார்.

>>>><<<<

டோக்கியாவிற்கு அரசுமுறைப் பயணம் மேற்கொண்டுள்ள மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ், ஜப்பானின் டிஜிட்டல் துறைக்கான அமைச்சர் தாரோ கோனாவுடன் இன்று பேச்சுக்கள் நடத்தினார்.

எதிர்கால தொழில்நுட்ப பயன்பாடு மற்றும் டிஜிட்டல் கட்டமைப்புகளை வலுப்படுத்துதல் தொடர்பாக இருதலைவர்களும் ஆலோசனை மேற்கொண்டனர்.

இந்தியா - ஜப்பான் இடையேயான டிஜிட்டல் கட்டமைப்பை வலுப்படுத்துவது குறித்தும் இரு தலைவர்களும் பேச்சுக்கள் நடத்தினர்.

முன்னதாக ஜப்பான் பிரதமரின் சிறப்பு ஆலோசகர் **Masafumi Mori-**யுடன் அவர் ஆலோசனை மேற்கொண்டார்.

ஜப்பான் நாட்டின் ரயில்வே மற்றும் உள்கட்டமைப்புத்துறை அமைச்சர் **Tetsuo Saito** வுடனும் அமைச்சர் ஆலோசனை மேற்கொண்டார்.

ரயில்வே துறையில் இருநாடுகளும் ஒத்துழைப்பு திட்டங்களை மேற்கொள்வது தொடர்பாகவும் இருவரும் ஆலோசனை மேற்கொண்டனர்.

**>>>><<<<**

188 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மண்டல கண் அறுவை சிகிச்சை கல்விக் கழகத்தை மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா பீகார் மாநிலம், பாட்னாவில் இன்று திறந்து வைக்கிறார்.

இந்திராகாந்தி மருத்துவக் கல்விக் கழகத்தில், இந்த கண் அறுவை சிகிச்சை பிரிவு தொடங்கப்படவுள்ளது.

கிழக்கு ஆசியாவிலேயே மிகப் பெரிய கண் அறுவை சிகிச்சை மையமாக இது திகழும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முஷாஃபர்பூர், கயா, தர்பங்கா, பாஹல்பூர் ஆகிய இடங்களில் பன்னோக்கு சிறப்பு மருத்துவமனைகளையும் திரு. நட்டா திறந்து வைக்கவுள்ளார்.

மாநிலத்தின் பல்வேறு இடங்களில் உள்ள மருத்துவ மையங்களையும் அமைச்சர் தொடங்கி வைக்கிறார்.

பின்னர், பீகார் முதலமைச்சர் திரு. நிதிஷ்குமாரை சந்தித்துப் பேசும் திரு. ஜெ.பி. நட்டா, பிஜேபி மாநில நிர்வாகிகள் குழுக் கூட்டத்திலும் கலந்து கொள்கிறார்.

அடுத்த 2 மாதங்களில் ஒரு கோடிக்கும் மேற்பட்ட உறுப்பினர்களை பிஜேபியில் சேர்ப்பது குறித்தும் திரு. ஜெ.பி. நட்டா மாநில நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தவுள்ளார்.

**>>>><<<<**

அமெரிக்காவின் மூன்று பெரிய தொழில்நிறுவனங்களுடன் தமிழகத்தில் 850 கோடி ரூபாய் முதலீட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள், முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் முன்னிலையில் சிகாகோவில் கையெழுத்தாகியுள்ளன.

லிங்கன் எலெக்ட்ரிக் நிறுவனத்துடன் 500 கோடி ரூபாய் முதலீட்டில் செங்கல்பட்டு மாவட்டத்தில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு உற்பத்தி மையத்தை விரிவாக்கம் செய்வதற்கான ஒப்பந்தமும், விஷய் பிரிசிஷன் நிறுவனத்துடன் 100 கோடி ரூபாய் முதலீட்டில் சென்ஸார் மற்றும் டிரான்ஸ்டியூசர்ஸ் உற்பத்தி மையத்தையும் நிறுவுவதற்கான ஒப்பந்தமும், விஸ்டியோன் நிறுவனத்துடன் 250 கோடி ரூபாய் முதலீட்டில் சென்னை மற்றும் கோயம்புத்தூரில் மின்னணு உற்பத்தியை நிறுவுவதற்கான ஒப்பந்தமும் கையெழுத்தாகியுள்ளன.

>>>><<<<

பள்ளி மாணவர்கள், எதிர்கால சவால்களை தன்னம்பிக்கையோடு எதிர்கொள்ளவும், அறிவாற்றலை கூர்மைப்படுத்திக் கொள்ளவும் தேவையான வழிகாட்டுதல்களை பள்ளிக்கல்வித்துறை மூலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், மாணவச் செல்வங்கள் அறிந்துகொள்ளத் தேவையான சிறந்த அறிவியல் சிந்தனைகள், தமிழக அரசு வெளியிடும் பாடநூல்களில் இடம்பெற்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

தனிமனித முன்னேற்றம், அறநெறி சார்ந்து வாழுதல் சமூக மேம்பாட்டுக்கான சீரிய கருத்துக்கள் மாணவர்களின் நெஞ்சங்களில் விதைக்கப்பட வேண்டும் என்றும் முதலமைச்சர் அந்த பதிவில் தெரிவித்துள்ளார்.

>>>><<<<

ஆந்திர மாநிலம், விஜயவாடா அருகே, புடமேரு கால்வாயில் ஏற்பட்டுள்ள உடைப்பை சரிசெய்யும் பணி மற்றும் வெள்ளம் பாதித்த பகுதிகளில் நிவாரண பணிகளில் இந்திய ராணுவம் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

முன்னதாக, மாநில அரசு இந்திய ராணுவத்தின் உதவியை கோரியதை அடுத்து, 40 ராணுவ பொறியாளர்கள் இந்திய விமானப்படையின் **AN**-32 விமானம் மூலம் **Hakimpet**-லிருந்து விஜயவாடாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

அம்மாநில அதிகாரிகள் மற்றும் பேரிடர் மேலாண்மை குழுவினருடன் இணைந்து இந்திய ராணுவமும் வெள்ள நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

>>>><<<<

விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டையை அடுத்த விஜயகரிசல் குளத்தில் ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் செயல்பட்ட தொழிற்கூடம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அகழாய்வுத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து எமது செய்தியாளர் தரும் தகவல்.

(வாய்ஸ் பைட் - கமலக்கண்ணன் 48 செகண்ட்ஸ்)

>>>><<<<

விநாயகர் சதுர்த்தி விழா நாளை கொண்டாடப்படுவதை ஒட்டி, விநாயகர் சிலைகள் விற்பனை விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

தமிழகத்தில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் களிமண்ணால் ஆன, இயற்கை சாயம் பூச்சப்பட்ட சிலைகள் அதிக அளவில் தயாரிக்கப்பட்டு விற்பனைக்கு வந்துள்ளதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

(வாய்ஸ் பைட் - சிவக்குமார் 25 செகண்ட்ஸ்)

>>>><<<<

இந்தியா, பிரேஸில், சீனா ஆகிய நாடுகள் யுக்ரைன் போர் நிறுத்தம் தொடர்பான அமைதி பேச்சுக்களை மேற்கொள்ள முன்வர வேண்டும் என்று ரஷ்ய அதிபர் திரு.விளாடிமிர் புட்டின் தெரிவித்துள்ளார்.

கிழக்கு பொருளாதார மன்றத்தில் பேசிய அவர், யுக்ரைன் பிரச்சினைக்கு தீர்வு காண இந்தியா, பிரேஸில், சீனா ஆகிய நாடுகளின் தலைவர்கள் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இந்த மூன்று நாடுகளுடன் ரஷ்யா தொடர்ந்து பேச்சுக்களை நடத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, ரஷ்யா மற்றும் யுக்ரைன் நாடுகளுக்கு அண்மையில் மேற்கொண்ட பயணத்திற்குப் பிறகு, ரஷ்ய அதிபரின் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

>>>><<<<

20 வயதுக்குட்பட்டோருக்கான உலக மல்யுத்த சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியாவின் ஜோதி பெர்வால், 76 கிலோ ஃப்ரீ ஸ்டைல் பிரிவில் தங்கம் வென்றுள்ளார்.

இறுதிபோட்டியில் யுக்ரைன் வீராங்கனை மரியா ஆர்லிவிச்சை வென்றார்.

>>>><<<<

பாரிஸ் பாராலிம்பிக் போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆடவர் ஈட்டி எறிதல் போட்டியின் இறுதிச் சுற்றில் இந்தியாவின் தீபேஷ் குமார் பங்கேற்கிறார். மகளிர் பிரிவில் சௌத்ரி பங்கேற்கிறார்.

>>>><<<<